பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**மிதிவண்டி காப்புறுதிப் பத்திரம்**

இந்த ஆவணமானது, உங்களது காப்புறுதியைப் பற்றிய சாராம்ச விளக்கமொன்றை வழங்குகின்றது. பூரண விபரங்களுக்கு, முழுமையான காப்புறுதிப் பத்திரத்தையும் அட்டவணையையும் உசாவவும், ஏதும் முரண்பாடு காணப்பட்டால், காப்புறுதிப் பத்திரமே மேலோங்கியிருக்கும்.

**1. காப்புறுதி காப்பீட்டு வகை**

மிதிவண்டி காப்புறுதிப் பத்திரமானது காப்புறுதி காலத்தின் போது **விபத்தானறின் காரணதாக ஏற்படும் பெயர் குறிக்கப்பட்ட எல்லா ஆபத்துகளுக்கு எதிராகவும்** கீழ் விபரிக்கப்படும் நியதிகள், நிபந்தனைகள், வரையறைகள், விடுகைகள் என்பவற்றின் கீழ் காப்பீடு செய்யும். வருடாந்த காப்புறுதிக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தாலோ அல்லது தொடக்க திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தப்படுவதாக உடன்பட்டிருந்தாலோ காப்புறுதிப் பத்திரம் செல்லுபடியாகும்.

**2. பிரதான பயன்பாடுகள் (எதனைக் காப்பீடு செய்கின்றது**

2.1 காப்புறுதி பெறுனருக்குச் சொந்தமான அல்லது காப்புறுதி வழங்குனரின் அனுமதியுன் உபயோகிக்கப்படும் மிதிவண்டி சம்பந்தப்பட்ட விபத்துகளின் காரணதாக மூன்றாம் தரப்பு **மரணம், உடற்காயம் அல்லது சொத்துச் சேதம்** என்பவற்றுக்கெதிராக கீழ் விபரிக்கப்படும் நியதிகள், நிபந்தனைகளின் கீழ் பாதுகாக்கும். .

2.2 விபத்துகள், தீ, மின்னல், வெடிப்பு மற்றும் (பலாத்கார அல்லது வன்முறை உட்புகுதலினால்) களவு என்பவற்றினால் காப்புறுதி செய்யப்பட்ட உங்களது மிதிவண்டி மற்றும் அதன் பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கு ஏற்படும் **சேதங்களுக்கு எதிராக,** காப்புறுதி பெறுமதி வரை காப்பீடு செய்யும். பின்வருவன நீங்கலாக, திருத்துதல், மாற்றீடு செய்தல் அல்லது இழப்புக்கு அல்லது சேதத்துக்கு பணம் செலுத்துதல் என்பவற்றை ஸ்தாபனம் தெரிவு செய்ய இயலும்.

2.2.1 சாராரண தேய்மானம் அல்லது பழுதுறல்.

2.2.2 ஒருமித்து மிதிவண்டிக்கு வேறும் சேதம் ஏற்பட்டாலன்றி, டயர், டியூப் சேதம் (மாற்றீடு செலவில் 50% க்கு வரையறுக்கப்பட்டது).

2.2.3 முழு மிதிவண்டியும் திருடப்பட்டாலன்றி, பாகங்களினதும் உதிரிப் பாகங்களினதும் களவு.

2.3 **விபத்து மரணம் அல்லது கடுங்காயங்கள்** (அவயவ, பார்வை இழப்பு). காப்புறுதி தொகையின் 100% வரை நட்டஈடு. 16 – 70 வயதுடையோருக்கு உரியதாகும். சுய தீங்கு, போதை, கர்ப்பம் மற்றும் ஓட்டப் போட்டி விபத்துக்கள் நீங்கலாக.

**மேலதிக காப்பீடு – தினசரி மருத்துவமளை கொடுப்பனவு**

மேலதிக காப்புறுதிக் கட்டணமொன்று செலுத்துவதன்' மூலம், உங்களுடைய மிதிவண்டியினால் ஏற்பட்ட விபத்தின் நேரடி விளைவான காயத்துக்காக மருத்துவமனைவாய்ப்பட்டால், 14 நாட்கள் வரை தினசரி ரூ.2,500 உங்களுக்கு கிடைக்கும்.

## 3. பிரதான விடுகைகள் (காப்பீடு செய்யப்படாதன)

3.1 **முறையற்ற உபயோகம்** – பரீட்சை, ஓட்டப் போட்டி, மெது ஓட்டுதல் என்பவற்றுக்காக பயன்படுத்தும் போதும், பயணியொருவரை ஏற்றிச் செல்லும் போதும், தகைமையற்றவர் ஒருவர் ஓட்டிச் செல்லும் போதும், போதையிலும், பாதுகாப்பற்ற/ பழுதுற்ற நிலையிலும், வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தும் போதும் ஏற்படும் விபத்துக்கள் அல்லது சேதங்கள்..

3.2 **இயற்கை மற்றும் பாரிய நிகழ்வுகள் –** (உ+ம். வெள்ளம், காற்று, நிலநடுக்கம் ஆகிய) இயற்கை அனர்த்தங்கள், வெடித்தல், போர், பயங்கரவாதம், கலகம், பணிப்பகிஷ்கரிப்பு அல்லது – சம்பவங்கள் முற்றிலும் தொடர்பற்றவை என நீங்கள் நிரூபித்தாலன்றி, அவை தொடர்பான சம்பவங்கள்.

3.3 **சட்டத்துக்கு முரணான அல்லது வன்முறை செயல்கள்** – பலாத்காரமாக அரசொன்றை கவிழ்க்கும் அல்லது அதன் மீது செலவாக்குச் செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நபர்களின் செயல்களினால் ஏற்படும் நிகழ்வுகள்.

3.4 **மிதமிஞ்சிய பழு** – மிதமிஞ்சிய பழுவினால் அல்லது பாரத்தினால் விளையும் சேதம்.

3.5 **மறைமுக இழப்புகள்** – அவை எவ்வாறு ஏற்பட்டிருந்தாலும், ஏதும் விளைவாந்தன்மையான இழப்புகள்.

3.6 **இலங்கைக்கு வெளியே** – இலங்கையின் பூ எல்லைக்கு வெளியே இடம்பெறும் ஏதும் சம்பவம்.

**பிரதான விடுகைகள் மாத்திரமே மேலே விபரிக்கப்பட்டுள்ளன. விடுகைகளின் முழுமையான பட்டியலுக்கு, தயவு செய்து காப்புறுதி ஆவணத்தை உசாசவவும்.**

## 4. காப்புறுதி பத்திர நிபந்தனைகள்

4.1 **ஒருமித்த ஒப்பந்தம்** – நீங்கள் எம்மிடமிருந்து காப்புறுதிப் பத்திரத்தையும் அதன் அட்டவணையையும் பெற்றுக் கொள்ளும் போது, அது பூரணமான தனி ஒப்பந்தமாகும். இங்கு நிர்னயிக்கபட்ட ஏதும் பதம், அதன் முழுவதும் அதே அர்த்தத்தை கொண்டிருக்கும்.

4.2 **செல்லுபடியற்றதாக்கல்** –

- உபயோகத்திலிருந்த காலத்துக்கு குறுகிய கால விகிதமொன்றை காப்புறுதி வழங்குனர் பெற்றுக் கொண்டு, எந்நேரத்திலும் காப்புறுதி பெறுனர் காப்புறுதி பத்திரத்தை செல்லுபடியற்றதாக்கலாம்.
- உபயோகிக்கப்படாத காப்புறுதிக் கட்டணத்தை மீளச் செலுத்துவதன் பேரில், ஏழு நாட்கள் அறிவித்தலுடன் காப்புறுதி வழங்குனர் காப்புறுதி பத்திரத்தை செல்லுபடியற்றதாக்கலாம்.

உங்களது கடைசியாக அறியப்பட்ட விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமாக ஏழு நாட்கள் அறிவித்தலொன்றை அனுப்புவதன் மூலம் நாம் காப்புறுதி பத்திரத்தை செல்லுபடியற்றதாக்கலாம்.

4.3 **பாதுகாப்பான உபயோகமும் பராமரிப்பும்** – உங்களது மிதிவண்டியை பாதுகாப்பதற்கும், தகைமையுடைய ஓட்டுனர்களை பயன்படுத்துவதற்கும், அவற்றை சீரான ஓடும் நிலையில் பேணுவதற்கும் அவசியமாக எல்லா நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

4.4 **சச்சரவு தீர்வு** – ஏதும் சச்சவ ஏற்படின், அதனைத் தீர்த்துக் கொள்வதற்கு இரு சாராரும் நன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். 60 நாட்களுக்குள் உடன்பாடொன்று எய்தப்படாவிடின், யாராவதொருவர், விடயத்தை காப்புறுதி குறைகேள் ஆணையாளருக்கு முன் வைக்கலாம். சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது போன்று, உங்களது சம்மதத்துடன், நாம் நடுவர் தீர்ப்பை கையாளலாம்.

4.5 **உங்கள் பொறுப்புக்கள்** – நீங்கள், காப்புறுதிப் பத்திரத்தின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் புறக்குறிப்புகள் யாவற்றையும் பின்பற்ற வேண்டியதோடு, உங்களது விண்ணப்பத்தில் உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறுவதானது, இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் ஏதும் செலுத்துகை செய்வதில் இருந்தும் எம்மைத் தடுக்கும்.

## 5. காப்புறுதிக் கட்டணம் செலுத்தும் முறை

ஒரு வருட காலமாகிய, முழுக் காப்புறுதிக் காலத்துக்கும் **ஒரே தடைவையில்** உங்கள் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

## 6. கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் போது காப்புறுதி பெருநரின் கடமைப்பாடுகள்.

6.1 **சம்பவத்தை சீக்கிரமாக அறிவிக்கவும்** – சம்பவமொன்று இடம்பெற்றால் கூடிய கதியில் எமது காரியாலயத்துக்கு அறிவிக்க வேண்டியதுடன், ஏதும் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்கவும். அத்தோடு, சம்பவம் தொடர்பான ஏதும் சட்ட நடவடிக்கை பற்றி நீங்கள் கேள்வியுற்றால், எமக்கு அறியத் தரவும்.

6.2 **மூன்றாம் தரப்பு பொறுப்பு** – மூன்றாம் தரப்பினர் சம்பந்தப்படும் ஏதும் சம்பவம் பற்றி அறியத் தருவதுடன், சகல சட்ட ஆவணங்களையும் உடனடியாக சமர்ப்பிக்கவும். தயவு செய்து, எமது எழுத்து மூலமான அனுமதியின்றி, தவறை ஒத்துக் கொள்ளவோ அல்லது கோரிக்கைகளுக்கு செலுத்தவோ வேண்டாம்.. நாம் உங்களுக்காக எதிர்காப்பையோ அல்லது சமரசத்தையோ கையாளலாம். எனவே, அவசியப்படும் எல்லா தகவல்களையும் வழங்கவும்.

6.3 **உங்கள் மிதிவண்டிக்கு விபத்தினால் சேதம்** – விபத்து நடந்தவுடன் முழு விபரத்துடன் சேதம் பற்றி அறிவிப்பதோடு, ஏதும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பகிர்ந்து கொள்ளவும்.

6.4 **களவு பற்றி அறிவித்தல்** – வீடுடைத்தல் அல்லது வன்முறை (அல்லது அச்சுறுத்தல்கள்) சம்பந்தப்பட்டு களவு நடந்தால், உடனடியாக பொலீசுக்கு அறிவிப்பதுடன், உங்கள் சொத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு, குற்றவாளிகளையும் அடையாளம் காணவும்.

6.5 **பிரத்தியேக விபத்து (ஓட்டுநர் அல்லது** பின் இருக்கை பயணி) - என்ன நடைபெற்றது என்பதைப் பற்றிய விபரத்துடன் பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கை படிவமொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

## 7. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 8. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**கோரிக்கை தொடர்பான விசாரணைகளுக்கு தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

✉ nonmotorclaimsteam@fairfirst.lk | ☎ +94 11 2428618

**முக்கிய குறிப்பு -**

பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.